
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk



விழிப்புடன் தியானத்தில் அமர்ந்து துறவு பூண்டு
முழுஞானம் பெற்றவரை தேவரும் விரும்புகிறார்கள்.
(தர்மபோதனை)

TUESDAY, APRIL 23, 2024

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 23, 2024 | ஒளி: 09 கதிர் 236 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

# சுட்டெரித்த சூடு தாங்காது தவித்த 3 அகதிகள் மீட்பு



**றொசேரியன் லெம்பெட்**

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அங்குள்ள தமிழர்கள் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

இந்த நிலையில் இலங்கை மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவர் உட்பட 3 நபர்கள் தனுஷ்கோடி அடுத்த ஐந்தாம் மணல் தீடையில் திங்கட்கிழமை (22) காலை தஞ்சம் அடைந்துள்ளனர்.

அப்பகுதிக்கு மீன் பிடிக்க சென்ற மீனவர்கள், இவர்கள் தொடர்பில், பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

சுட்டெரிக்கும் வெயிலில் வெப்பத்தில் சூடு தாங்க முடியாமல் ஐந்தாம் மணல் தீடையில் தஞ்சம் அடைந்த இலங்கை அகதிகளை மரைன் பொலிஸார் அதிரடியாக நடவடிக்கை எடுத்து கடலுக்குள் சென்று பாதுகாப்பாக மீட்டு கரைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

சூடு தாங்க முடியாமல் தவித்த தங்களை மீட்ட மரைன் பொலிஸாருக்கு மூவரும் நன்றி தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# வெப்ப எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலையானது எச்சரிக்கை மட்டத்துக்கு உயர்வடையக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. எனினும், ஆங்காங்கே அவ்வப்போது சிறியளவில் மழை பெய்யும் என்றும் எதிர்வு கூறியுள்ளது.

தொடர்ச்சி P2

## சுதந்திர கட்சியின் தவிசாளர் பதவியை ஏற்றதால்

# “எம்.பியை இழக்கக்கூடும்”



## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பி தெரிவிப்பு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக பதவியேற்ற நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் (SLPP) யாப்பின் பிரகாரம் தனது பாராளுமன்ற உறுப்புரிமையை இழக்க நேரிடும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் விவகாரம் தொடர்பில் பெரமுன இன்னும் கலந்துரையாடவில்லை எனவும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் விரைவில் முடிவெடுப்பார் எனவும் அவர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ரணில்–பஷில் இன்று பேச்சு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும், ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் ஸ்தாபகர் பஷில் ராஜபக்ஷவிற்கும் இடையில் செவ்வாய்க்கிழமை (23) மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

# “பொருளாதார பலத்தை வழங்குவதே நோக்கம்”



முதலில் எமது நாட்டில் விளையும் அரிசியை எமது நாட்டின் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வழங்க மாவட்ட செயலாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள பிரதமர் தினேஷ் குணவர்தன,. அது முடியாத பட்சத்தில் தான் வெளி நாட்டிலிருந்து அரிசியை கொண்டுவந்து சந்தையில் வாங்க முடியும் என்றார்.

சொந்தக் காலில் நிற்கக் கூடிய நாடாக, உணவில் தன்னிறைவு பெற்ற நாடாக, நாட்டின் அனைத்து மக்களுக்கும் நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய நம்பகமான பொருளாதார பலத்தை வழங்குவதே எமது நோக்கமாக இருக்க வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2

Foxhill அனர்த்தம்

# கார் பந்தயத்தின் சாரதிகள் இருவருக்கு விளக்கமறியல்



தியத்தலாவ நரியகந்தவில் இடம்பெற்ற “Foxhill Super Cross Race” கார் விபத்து தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வாகன சாரதிகள் இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பண்டாரவளை நீதவான் அன்டனி எஸ்.பீட்டர் ஃபால்ல் , திங்கட்கிழமை (22) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

# சஜித் அணியில் அறுவர் ரூ.50 மில். வாங்கினர்

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் (SJB), எம்.பி.க்கள் பலர் வரவு-செலவுத் திட்டத்தில், அரசாங்கத்தின் பரவலாக்கப்பட்ட நிதியில் இருந்து தலா 50 மில்லியன் ரூபாய் பெற்றுக்கொண்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

සමගි ජන බලවේගය
ஐக்கிய மக்கள் சக்தி
Samagi Jana Balawegaya

# ID தொடர்பில் அதிரடி அறிவிப்பு



பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தால் இதுவரை தேசிய அடையாள அட்டையைப் பெற முடியாத 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அதனை பெற்றுக் கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி வரை

தொடர்ச்சி P2

# “வழங்கப்படும் அரிசி தரமற்றது”



சிறுவர்களுக்கான மதிய உணவுக்காக வழங்கப்பட்ட அரிசி தரமற்றதென குற்றஞ்சாட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பிள்ளைகளுக்கு தரமான அரிசியை வழங்க முடியாத அரசாங்கம் நாட்டை கட்டியெழுப்பும் என கூறுவது நகைப்புக்குரியது என்றார்.

தொடர்ச்சி P2

# நுவரெலியாவில் ஆட்பதிவு அலுவலகம் திறப்பு



**டி.சந்ரு செ.திவாகரன்**

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக நுவரெலியா மாவட்ட ஆட்பதிவு திணைக்களத்தின் காரியாலயத்தை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், திங்கட்கிழமை (22) திறந்து வைத்தார். இந்த காரியாலயம், நுவரெலியா இலக்கம் 95/26 A, லேடி மெக்லம் வீதி ஹாவஎலிய என்ற புதிய விலாசத்தில் இயங்குகிறது.

இந்நிகழ்வில், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுசாமி இராதாகிருஸ்ணன் சீ.பி. ரட்நாயக்க, மருதுபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

# உலப்பனே தேரருக்கு விளக்கமறியல்



ஆசிரியர் அதிபர்கள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் உலப்பனே சுமங்கல தேரர் உள்ளிட்ட மூவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் பிரசான் அமரசேன, திங்கட்கிழமை (22) உத்தரவிட்டுள்ளார்.

நாரஹேன்பிட்டி, தாபரே மாவத்தையில் உள்ள பல குடிசை வீடுகளை அகற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அதற்கு இடையூறு விளைவித்தமைக்காகவும் நீதிமன்றில் முன்னிலையான கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் அதிபருமான உலப்பனே சுமங்கல தேரர் நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “எம்.பியை இழக்கக்கூடும்”



கட்சியின் யாப்பு மற்றும் சட்டங்களின்படி, ஒருவர் மற்றுமோர் அரசியல் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றவுடன் அவரது கட்சி உறுப்புரிமையை விரைவில் இழக்க நேரிடும் என்று பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

இதனால், அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கட்சி உறுப்புரிமையை இழக்க நேரிடும் என்றும், அதன் மூலம் அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழக்க நேரிடும் என்றும் அவர் கூறினார்.

“அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அங்கத்துவத்தைப் பெற்று, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கீழ் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அவர் எதிர்க்கட்சி உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொண்ட குற்றத்தை செய்துள்ளார். அதனால், அவரது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமை இரத்துச் செய்யப்படும், அதன் விளைவாக, அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்க நேரிடும்" என்றார்.

# வெப்ப எச்சரிக்கை



வடக்கு, வடமத்திய, மேற்கு, சபரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்தின் சில இடங்களிலும் வெப்பநிலை அதிகரித்து காணப்படும்.

எனவே சிறுவர்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் இந்த நிலைமை தொடர்பில் அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அதிகரிக்கும் வெப்பநிலை காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்வதற்காக போதியளவு நீரை பருகுமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் நிலவிவரும் மழையுடனான வானிலை படிப்படையாக குறைவடையும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# “பொருளாதார பலத்தை வழங்குவதே நோக்கம்”



குறைந்த வருமானம் பெறுவோருக்கு அரிசி வழங்கும் அரசாங்கத்தின் புதிய திட்டம் மஹரகம, பிரகதிபுரவில், ஞாயிற்றுக்கிழமை (21) நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு மேலும் உரையாற்றிய பிரதமர்-

ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பல்வேறு பிரச்சினைகளால் அவதியுறும் குறைந்த வருமானம் பெறுவோருக்கும், பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரிசி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கு குறைந்தபட்சம் ஒரு வேளையேனும் உணவுப் போசனையை வழங்குவதே அரசின் நோக்கமாகும் என்றார்.

நாங்கள் மிகவும் கடினமான ஒரு காலத்தை கடந்துவந்துள்ளோம். சில வீடுகளில் மண்ணெண்ணையைப் பெற்றுக்கொள்ள வெகுதூரம் செல்ல வேண்டியிருந்தது. அந்த நாட்களையும் வாரங்களையும் மிகுந்த சிரமத்துடன் கழித்ததன் பின்னர், அரசாங்கம் என்ற வகையில் எங்களால் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வர முடிந்தது. அந்த சுமையை முதலில் தாங்கியவர்கள் விவசாயிகள்தான். அந்தச் சுமையை விவசாயிகள் சுமந்ததால் இலங்கைக்கு மேலதிக அறுவடை கிடைத்தது. நாம் உணவில் தன்னிறைவு அடைய முடிந்ததை உணர்ந்து, வெளிநாடுகள் மீண்டும் எமக்கு உதவி செய்ய முடிவு செய்தன என்றார்.

# “வழங்கப்படும் அரிசி தரமற்றது”



இந்நாட்டில் நடக்கும் அனைத்தும் தரமான முறையில் நடக்க வேண்டும். பூச்சியுடன் கூடிய அரிசியை பிள்ளைகளுக்கு கொடுப்பது மதிய உணவுக்காக வழங்குவது நியாயப்படுத்த முடியாத குற்றச் செயலாகும் என்றார்.

ஆட்சியை தக்க வைக்க தற்போதைய அரசாங்கத்தால் பல்வேறு சதிகளும் சூழ்ச்சிகளும் அரங்கேறி வருகின்றன. 10,126 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதை விடுத்து, தமது சொந்த நலனுக்காக அதிகாரத்தைப் பெறுவதற்காகவே இவை அனைத்தையும் மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 160 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், ஹம்பாந்தோட்டை, பெலியத்த, இஹலபெலிகல்ல மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஏப்ரல் 22 ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவை அனைத்தும் அரசியல் சதிகள், இந்த சதிகள் நாட்டை மேலும் சீர்குலைக்கும். நாட்டை சூழ்ந்துள்ள இருளை நீக்கி சுபிட்சத்தை ஈட்ட ஐக்கிய மக்கள் சக்தி செநற்படும். விழுமியம் மிக்க அரசாட்சியை கொண்டு நடத்த வேண்டும். அது முடியாத பட்சத்தில் எந்நேரத்திலும் வீட்டுக்கு செல்ல தயார் எனவும், நாட்டை கட்டியெழுப்புவதற்கான சரியான திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி வகுத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# ரணில்-பஷில் இன்று பேச்சு



ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அழைப்பின் பேரில் இந்த பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட உள்ளதென அறியமுடிகின்றது.

இருவருக்கும் இடையில், மூன்று சுற்று பேச்சுவார்த்தைகள் ஏற்கெனவே நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் தேர்தல்கள் உள்ளிட்ட சில முக்கியமான விடயங்கள் தொடர்பில் இந்த பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஈரானிய ஜனாதிபதி, பாகிஸ்தானை வந்தடைந்தார்

ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக திங்களன்று (22) பாகிஸ்தானை வந்தடைந்தார்

ரைசி இஸ்லாமாபாத் விமான நிலையத்திற்கு வந்தடைந்ததாகவும், அவரை வீட்டு வசதி அமைச்சர் மியான் ரியாஸ் ஹுசைன் பிர்சாடா மற்றும் ஈரானுக்கான பாகிஸ்தான் தூதர் முடாசிர் திப்பு ஆகியோர் வரவேற்றதாக வெளியுறவு அலுவலகம் (FO) தெரிவித்துள்ளது.

"ஈரான் ஜனாதிபதியுடன் அவரது துணைவியார் மற்றும் வெளியுறவு அமைச்சர் மற்றும் பிற அமைச்சரவை உறுப்பினர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் அடங்கிய உயர்மட்டக் குழு உள்ளது" என்று அது கூறியது. அவர், பாகிஸ்தான் விஜயத்தை நிறைவு செய்துகொண்டு, இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அந்த விஜயத்தின் போது பல்வேறுமட்ட கலந்துரையாடல்களில் ஈடுபடுவார். அத்துடன், 24ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் இம்மாதம் 24 ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளது. இஸ்ரேல் மீது ஈரான் கடந்த சனிக்கிழமை (13) வான் வழித்தாக்குதலை நடத்திய நிலையில், பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்றநிலைக்கு மத்தியில் ஈரான் ஜனாதிபதியின் விஜயம் அமையவிருக்கின்றது.

# கார் பந்தயத்தின் சாரதிகள் இருவருக்கு விளக்கமறியல்




தியத்தலாவ நர்யகந்த ஃபோக்ஸ்ஹில் மோட்டார் பந்தயத்தில் கலந்து கொண்டு பந்தய இலக்கம் 5-ன் கீழ் போட்டியிட்ட மாத்தறை மெதபாறை ஹித்தெட்டிய பிரதேசத்தை சேர்ந்த ரஞ்சித் உடுவிட்ட (36), பந்தய இலக்கத்தின் கீழ் போட்டியிட்ட பேராதனை மாகந்த பிரதேசத்தை சேர்ந்த ஏ.எம்.டிலான் சஞ்சீவ (47) போட்டி இலக்கம் 196 ஆகிய இருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் தியத்தலாவ நர்யகந்த ஃபாக்ஸ்ஹில் கார் பந்தயத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) கலந்து கொண்ட போது இரு கார்களும் விபத்துக்குள்ளானதில் 8 வயது சிறுமி உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் 21 பேர் படுகாயமடைந்து தியத்தலாவை அடிப்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் அதில் சிலர் பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

Foxhill வாகன விபத்தில் காயமடைந்த இரு போட்டியாளர்கள் தற்போது தியத்தலாவ ஆதார வைத்தியசாலையில் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்பில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பண்டாரவளை நீதவான் அன்டனி எஸ்.பீட்டர் ஃபால் தியத்தலாவை ஆதார வைத்தியசாலைக்கு திங்கட்கிழமை (22) பிற்பகல் சென்று இரண்டு போட்டியாளர்களும் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த வார்டில் சோதனை செய்த பின்னர், சந்தேகத்திற்குரிய இரண்டு போட்டியாளர்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# ID தொடர்பில் அதிரடி அறிவிப்பு

நீடிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. விண்ணபிப்பதற்கான இறுதி நாளாக கடந்த 31 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், பிரதேச செயலாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை அதனை நீடித்துள்ளதாக, ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் ஜி.பிரதீப் சபுதந்திரி தெரிவித்தார்.

# உலப்பனே தேரருக்கு விளக்கமறியல்



சந்தேகநபர்கள் நீதிமன்ற உத்தரவுக்கு கீழ்படியாத காரணத்தினால் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு அறிவித்த நீதவான், சந்தேகநபர்கள் எதிர்வரும் 27ஆம் திகதி பரீட்சைக்கு முகம்கொடுக்க வேண்டியிருப்பதால் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அறிவித்தார்.

# சஜித் அணியில் அறுவர் ரூ.50 மில்லியன் வாங்கினர்

கட்சித் தலைமையின் அனுமதியின்றியே நிதியை பெற்றுக்கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் எதிர்க்கட்சியில் உள்ள எம்.பி.க்களுக்கு அவர்களின் தொகுதிகளில் விருப்பமான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற அரசுகள் நிதி ஒதுக்கீடு செய்து வந்தன. எவ்வாறாயினும், கடந்த ஐந்து வருடங்களாக இவ்வாறான ஒதுக்கீடுகள் இடம்பெறவில்லை, மாறாக, அதே நோக்கத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் அக்காலப்பகுதியில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

தற்போதைய அரசாங்கம் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தி உள்ளதுடன் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட புதுப்பிக்கப்பட்ட அளவுகோலின் படி ஒதுக்கீடுகளைப் பெற்றுள்ளனர்.

கயந்த கருணாதிலக்க, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, அஜித் மன்னப்பெரும, கவிந்த ஜயவர்தன மற்றும் ஜே.சி. அலவத்துவல போன்றோர் இவ்வாறு ஒதுக்கீடுகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களில் அடங்குவர்.

ஆனால், இந்த எம்.பி.க்கள் அரசிடம் இருந்து நிதி பெறுவதற்கு கட்சித் தலைமையிடம் ஒப்புதல் பெறவில்லை.

இது தொடர்பில் கருத்துரைத்த, ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, இந்த எம்பிக்கள் எவரும் அதற்கான கட்சியின் அங்கீகாரத்தைப் பெறவில்லை என்றார்.

அடுத்த பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த விவகாரத்தை எழுப்புவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இதைப் பெற தகுதியுடையவர்கள் என்றும், எனவே மக்களை மையப்படுத்திய பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு கோரி விண்ணப்பித்ததாகவும் ரூ. 50 மில்லியன் பெற்றுக் கொண்ட எம்.பி. ஒருவர் கூறினார்.

“அத்தகைய வேலையைச் செய்வதில் தவறில்லை. பரவலாக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து பயனடைய நாங்கள் உரிமை பெற்றுள்ளோம். கட்சி மேலிடத்தை தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு இல்லை," என்றார்.

# “கன்றுக்கு Ear Tag கட்டாயம்”

வடக்கு மாகாணத்தில் கால்நடைகள் திருடப்படுவதை தடுக்கும் வகையில் அனைத்து கால்நடைகளையும் பதிவு செய்யும் நடவடிக்கையை கட்டாயமாக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கால்நடைகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் பதிவாகின்றமையை கருத்திற்கொண்டு ஆளுநர் பணிப்புரையை விடுத்துள்ளார்.

அதற்கமைய, கால்நடைகளை வளர்ப்போர் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் எனவும், வெளிமாவட்டங்களுக்கு கால் நடைகளை கொண்டு செல்வதற்கான அனுமதியை வழங்கும் போது உரிய சட்ட விதிகளை அதிகாரிகள் பின்பற்ற வேண்டும் எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், கன்று பிறந்து 18 மாதங்களுக்குள் காது அடையாள வில்லைகளை (Ear Tag) பொருத்திக் கொள்வதை கட்டாயமாக்க வேண்டும் எனவும், அவ்வாறு செய்யாத கால்நடை வளர்ப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் காது அடையாள வில்லைகள் (Ear Tag) பரிசோதிக்கப்பட வேண்டும் எனவும், உரிய நடைமுறைகளை பின்பற்றாத இறைச்சி வெட்டும் இடங்கள் மற்றும் விற்பனை செய்யும் இடங்களுக்கு சீல் வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# விபத்தில் மாணவி பலி

கந்தளாய், ரஜஎல பிரதேசத்தில், ஞாயிற்றுக்கிழமை (21) இடம்பெற்ற வேன் விபத்தில் மாணவி உயிரிழந்துள்ளார்.

கந்தளாய், ரஜஎல நான்காம் யூனிட் பகுதியை சேர்ந்த , கந்தளாய் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஜே . எம் . ஜீ . ஹசினி பிரபோதனி என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்



அவர் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளுக்காகக் காத்திருந்தவர் என தெரியவந்துள்ளது .

தனது உறவினர் வீட்டில் இருந்து தனது வீட்டிற்க்கு நடந்து சென்று கொண்டிருந்த போது பின்னால் வந்த வேன் வேக கட்டுப்பாட்டை இழந்து, அருகிலிருந்த மரத்தில் மோதி , வீதியை விட்டு விலகி, யுவதி மீது மோதியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

# புலிகளின் தங்கத்தை தேடிய நால்வர் கைது

சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தை அண்டிய இடத்தில் புலிகளால் புதைக்கப்பட்டதாக கூறப்படும் பணம் மற்றும் தங்க ஆபரணங்களை மீட்பதற்காக குழி தோண்டினர் என்ற சந்தேகத்தின் பேரில் கடற்படை வீரர் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டதாக சிலாவத்துறை கடற்படை தெரிவித்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மன்னார் தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சிலாவத்துறை கடற்படையினரால்



மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கடற்படை சிப்பாய் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வந்ததாக கூறப்படும் இடத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 30-38 வயதுடைய நாவுல, மெனிக்தென மற்றும் அநுராதபுரத்தை சேர்ந்தவர்கள். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் சாரதி எனவும் மற்றையவர் தொழிலாளி எனவும் பொலிஸ் விசாரணைகளின் போது அடையாளம் காணப்பட்டுள்ளது.

# எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ இணைகிறார்



அமெரிக்கவின் எலைட் சர்வதேச வான் பல்கலைக்கழகத்தின் மதிப்புக்குரிய பழைய மாணவராக இலங்கை விமானப்படை தளபதி, இணைகின்றார்.

அலபாமா மேக்ஸ்வெல் விமானப்படை தளத்தில் அமைந்துள்ள வான் பல்கலைக்கழகத்தின் சர்வதேச மரியாதை பட்டியல் (International Honour Roll) அறிமுக விழா கடந்த 2024 ஏப்ரல் 19ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது அந்தப் பல்கலைக்கழகத்தில் பயின்ற 21 முன்னாள் சர்வதேச மாணவர்கள் கௌரவப்படுத்தப்பட்டனர். இதன்போது இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவும் இந்த கௌரவ பட்டியலில் இணைந்து கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச வான் பல்கலைக்கழகத்தினால் சர்வதேச மரியாதை பட்டியல் (International Honour Roll) கௌரவமளிப்பு அந்த பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியை கற்ற இராணுவ மற்றும் முதன்மை சிவில் பிரிவில் கடமையாற்றும் வெளிநாட்டு அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட கட்டளை இல்லாத அதிகாரிகளுக்கு வழங்கி கௌரவிக்கப்படும்.

# லோனாக் பண்ணையாளர்கள் வேலைநிறுத்தம்



யோகேசன், ரஞ்சித் ராஜபக்ஷ

நோர்டன்பிரிக்கேஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டவளை லோனாக் கால்நடை பண்ணையின் தொழிலாளர்கள், திங்கட்கிழமை (22) காலை முதல் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்து, கால்நடை பண்ணைக்கு முன்பாக கால்நடை பண்ணை நிர்வாக அதிகாரிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட்டவளை தோட்டக் கம்பனியின் கட்டுப்பாட்டில் இருந்த லோனாக் கால்நடைப் பண்ணை கையகப்படுத்தப்பட்டது,

லோனாக் தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த தேயிலை தோட்டம் முற்றிலுமாக அகற்றப்பட்டு அந்த நிலத்தில் கால்நடை பண்ணைக்கு தேவையான புற்களை பயிரிட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பண்ணையில் பணிபுரியும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர் வெட்டப்பட்டு விற்கப்படும் புல், மக்காச்சோள மரங்கள் மற்றும் புற்களை கால்நடை தீவனமாக மற்ற மாகாணங்களில் இருந்து வாங்குகிறார்கள்.

மேலும், கால்நடை பண்ணையில் பணிபுரிய மற்ற மாகாணங்களில் இருந்து பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறார்கள், அவர்கள் தங்கள் தோட்டங்களில் வசிக்கும் தகுதியானவர்களை பணியமர்த்துவதில்லை, கால்நடை பண்ணையில் பணிபுரிந்த பல ஊழியர்களுக்கு கட்டுப்பாட்டிலிருந்து செலுத்த வேண்டிய வேலைவாய்ப்பு அறக்கட்டளை நிதி செலுத்தப்படவில்லை. பல மாதங்களாக அதிகாரம், ஊழியர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், கட்டுமான பணிகள் குறைந்த அளவிலேயே உள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

# பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து பேச்சு

பெருந்தோட்ட மக்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் பற்றியும், அவர்கள் எதிர்கொள்ளும் சில சவால்களை உரியவாறு கையாள்வதற்கான இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளின் அவசியம் குறித்தும் உலக வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கிக் குழுமத்தின் 2024ஆம் ஆண்டுக்கான கோடைகால கூட்டத்தொடர் வொஷிங்டனில் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமான நிலையில், 17 - 19ஆம் திகதி வரை முக்கிய அமைச்சர் மட்டக் கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டத்தில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானும் கலந்துகொண்டிருந்தார்.

இலங்கையின் நீர்வழங்கல் துறையில் புதிய செயற்றிட்டமொன்றை அறிமுகப்படுத்துவதை முன்னிறுத்தி உலக வங்கியின் நீர்வழங்கல் பிரிவுடன் நெருங்கிப் பணியாற்றி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நீர்வழங்கல் துறையில் தாம் முன்னெடுத்து வரும் மறுசீரமைப்புக்களுக்கு ஆதரவளிக்கக்கூடியவாறான புதிய செயற்றிட்டமொன்று குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று உலக வங்கி, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், பல்தரப்பு முதலீட்டு உத்தரவாத முகவரகம் ஆகியவற்றின் உதவியுடன் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கடன்களை மீள் ஒருங்கிணைக்கவும், அதன் நிதியியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தவும் முடியும் எனவும், அரச - தனியார் துறையினரின் கூட்டிணைவின் மூலம் நீர்வழங்கல் திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும் எனவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும், பெருந்தோட்ட மக்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் பற்றியும், அவர்கள் எதிர்கொள்ளும் சில சவால்களை உரியவாறு கையாள்வதற்கான இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளின் அவசியம் குறித்தும் உலக வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக அவர் தெரிவித்துள்ளார்.



# திருகோணமலையில் CARAT Sri Lanka பயிற்சி



அமெரிக்க கடற்படை, அமெரிக்க மெரைன் கோர்ஸ், மற்றும் இலங்கை கடற்படை என்பன ஒன்றாக இணைந்து, ஏப்ரல் 22ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை Cooperation Afloat Readiness and Training (CARAT) Sri Lanka 2024 எனும் பயிற்சியினை திருகோணமலையில் மேற்கொள்ளவிருக்கின்றன.

இலங்கை கடற்படையின் மெரைன் எதிரிணைகளுடன் இணைந்து அனைத்து வகையான கடற்படை திறன்கள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்படும் CARAT Sri Lanka பயிற்சியானது, கடற்படைச் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய விடயங்களில் விசேட நிபுணத்துவம் பெற்ற அமெரிக்க மெரைன் கோர்ஸ் இன் படைப் பிரிவான அமெரிக்க கப்பற்படை பயங்கரவாத எதிர்ப்புப் பாதுகாப்புக் குழுவின் (FAST) நிபுணத்துவத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கும்.

ஏப்ரல் 24ஆம் திகதி நடைபெறவிருக்கும் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கையும் CARAT Sri Lanka பயிற்சி உள்ளடக்கியுள்ளது. ஐந்தாவது முறையாக நடைபெறும், இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த தமது பங்காளர்களுடன் கிட்டத்தட்ட 70 அமெரிக்க அலுவலர்கள் பணிபுரியும் இந்த CARAT Sri Lanka இருதரப்பு கடல்சார் பயிற்சியானது, சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக் பிராந்தியத்தைப் பராமரிப்பதற்காக அமெரிக்காவும் இலங்கையும் கொண்டுள்ள வலுவான பங்காண்மை மற்றும் பொதுவான அர்ப்பணிப்பு ஆகியவற்றை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.






# இறால் பண்ணையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

வாகரை பிரதேசத்தில் மேற்கொள்ள திட்டமிட்டுவரும் இறால் பண்ணைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், இல்மனைட் அகழ்வை முற்றாக தடை செய்யுமாறு வலியுறுத்தியும் கிராம மக்கள் மற்றும் சிவில் அமைப்புகளினால் வாகரை பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று திங்கட்கிழமை (22) முன்னெடுக்கப்பட்டது .

இதன்போது அவ்விடத்திற்கு வருகைதந்த பிரதேச செயலாளர் தாம் புதிதாக எந்த அனுமதியையும் இறால் பண்ணை மற்றும் இல்மனைட் அகழ்வுக்காக வழங்கவில்லை என்றும் இனியும் வழங்கப்போவதில்லை என்றும் உறுதியளித்ததோடு தனது அதிகாரத்தையும் மீறி ஆளுனர் மற்றும் அமைச்சுக்கள் இணைந்த தரப்பின் ஆதரவுடன் குறித்த திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறியுள்ளார் . அத்துடன் வாகரை பிரதேசத்தில் இல்மனைட் அகழ முயற்சிக்கும் அல்செமி கெவி மெட்டல் கம்பனியால், தனக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதையும் மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தியிருந்தார்.

பின்னர் மக்களின் கோரிக்கைகளுக்கு ஆளுனர் மற்றும் ஏனைய மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என வலியுறுத்தி பிரதேச செயலகத்தின் முன்பாக மக்கள் தொடர்ந்தும் போராடி வந்த நிலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை , மாவட்ட செயலாளர் அப்பகுதி மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடி முடிவெடுக்க தயாராக இருப்பதாகவும் அதுவரை இப் போராட்டத்தை கைவிடுமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க வெள்ளிக்கிழமை வரை இப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டுள்ளதாகவும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர் .

தேவை

பொடி பூசுதல் மற்றும் பெயிண்ட் பூசுதலுக்காக திறமையுடைய மேசன் ஆட்கள் தேவை தொடர்புக்கொள்ளவும் - 0768527009

# மாண்புமிகு எம்.பிக்களின் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது

கடந்த காலத்தில் அரசியல் "கௌரவமான சேவையாக" மாறிய ஒரு சகாப்தம் இருந்தது. தான் சம்பாதித்த சொத்துக்களை பொது சேவைக்காக அர்ப்பணித்த மாண்புமிகு மக்கள் பிரதிநிதி, எளிமையான மற்றும் சிக்கனமான வாழ்க்கை வாழ்ந்தனர்.

கொழும்பில் இருந்து வெகு தொலைவில் வசிப்பவராக இருந்தால், ரயில் அல்லது பேருந்தில் கொழும்பு வந்து, எம்.பி.க்கள் தங்கும் விடுதியான ஸ்ராவஸ்த்ரியவில் தங்கிநின்று, பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொண்டு, வந்த வழியே கிராமத்துக்குத் திரும்பினர்.

நேர்மையை பெருமையாக அணிந்த அந்த மக்கள் பிரதிநிதிக்கு பாதுகாப்பு என்ற கேள்வி எழவில்லை. இந்தக் காலத்தைப் போல் அப்போது கார் நிறுத்துமிடம் இல்லை. காலம் வேகமாக பறந்து பல விஷயங்களை தலைகீழாக மாற்றிவிட்டது. அரசியல்வாதி, பொதுச் செல்வங்களை அபகரிக்கும் கேவலமான நயவஞ்சக பாத்திரத்திற்கு மாறினர். அரசியலும் கௌரவமான சேவையை விட்டு கெட்டுப் போனது. இந்தியப் பெருங்கடலின் முத்து ஒரு தர்க்கரீதியான விளைவாக முடிவில்லாத அவமானத்தை அனுபவிக்கும் திவாலான நாடாக மாறியுள்ளது.

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட வரியில்லா வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் குழு மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மற்றும் அரசாங்கத் தலைவர்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் குறைந்த வாகனம் அல்லது வாகன உரிமத்தை வழங்க வேண்டும் இதன்படி, எதிர்வரும் நாட்களில் இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று பாராளுமன்றத்தின் சபைக் குழுவில் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விகிதாசார தேர்தல் முறையின் கீழ், ஒரு வேட்பாளர் மாவட்டம் முழுவதும் பிரசாரம் செய்ய வேண்டும். அதற்கு பெரும் செலவாகும். அது மிகப்பெரிய செல்வம், பாராளுமன்ற உறுப்பினராக வரும் மாண்புமிகு பொதுப் பிரதிநிதி முதலில் முதலீடு செய்த செல்வத்தை தேட வேண்டும். அடுத்த தேர்தலுக்கும் பணம் தேடவேண்டும். அதற்கு ஒன்று அவர் பொது பணத்தை திருட வேண்டும். அல்லது போதைப்பொருள் வியாபாரிகள் உட்பட அனைத்து விதமான சமூக விரோத செயல்களுக்கும் அடிமையாகவேண்டும்.

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான வாகனம் வாங்குவதற்கு வரியில்லா வாகன உரிமம் பெற்றுள்ளனர். ஆனால் நாட்டில் நிலவும் மோசமான பொருளாதார நிலை காரணமாக வாகன உரிமம் வழங்குவது சுமார் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பே இடைநிறுத்தப்பட்டது. இதற்கான உரிமம் கடந்த 2015ம் ஆண்டு வழங்கப்பட்டது.

ஒரு வாகனம் கூட இல்லாத பல புதிய எம்.பி.க்கள் பாராளுமன்றத்தில் உள்ளனர். அமைச்சர்களின் பணிக்கு ஏற்ற வாகனம் வேண்டும். இது முற்றிலும் உண்மை. ஆனால், அரசியல் கலாசாரத்தின் சீரழிவுக்கு ஏற்ப, அமைச்சர்களின் உயர் சொகுசு வாழ்க்கைக்கு வாகனம் நாகரீகமாக மாறியது. சில அமைச்சர்களுக்கு முன்பக்க வாகனங்களும், பின்பக்க வாகனங்களும் இல்லாமல் சொந்த கிராமத்தில் கூட பயணிக்கக்கூடாது என்ற வெறி உருவாகியுள்ளது நாட்டின், மக்களின் பிரச்சினைகளை விட, மக்கள் பிரதிநிதிகளின் பிரச்சனைகள் தீவிரமடைந்துள்ளதாகத் தெரிகிறது.

நாட்டின் நிலைமையை அறிந்து செயலாற்றுவதே சிறந்தது என்பதை வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

காலம் கைமாறி போகும். செல்வந்தர்களின் பரம்பரை அதே நிலையில் தொடர்ந்தும் இருப்பது அரிது. அரசியல் தலைமைகள், பதவி மாறியபடியே இருக்கிறது.

கல்வியில் சமநிலைத் தன்மை ஏற்பட்டதால் வருமானம் குறைந்தவர்களின் பிள்ளைகளும் உயர் நிலைக்கு வரமுடியும். இன்ப, துன்ப நிலை மாறுவது போல வையகத்தின் மாற்றங்கள் பாகுபாடின்றி சுழற்சி முறையில் நடைபெற்றபடியே நடந்தேறும்.

அநேகமான மனிதர்களின் வாழ்வின் எழுச்சிகளை துன்பியல் அனுபவங்களே ஏற்படுத்துகின்றன. எனினும், இந்த விடயங்களை சோம்பேறிகள் உணர்வதேயில்லை.

மூளையை, உயிர்பிக்காமல் அநேகர் உறங்கியப்படியே இருக்கின்றனர். இரும்பு உபகரணங்களை உபயோகிக்காமல் விட்டால் அது துருப்பிடித்துவிடும். எந்த அழகான பொருள்களையும் மெருகேற்றினால்தான் அது ஜொலிக்கும். கருமங்கள் ஒருவரை நல்ல உருவவாக்கிறது.

- பருத்தியூர் பால வயிரவநாதன்

# அஷ்ரபிற்குப் பிறகு தனித்துவ அரசியல் சாதித்தது என்ன?

மொஹமட் பாதுஷா

இவ்வளவு காலமும் வேலைப்பழு, பிஸி என்று பொய்க் காரணங்களைக் கூறிக் கொண்டு கொழும்பில் குடிகொண்டிருந்த முஸ்லிம் தலைவர்களும், தங்கள் சொந்த ஊரில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அரசியல்வாதிகளும் இப்போது தமது வாக்கு வங்கிகள் இருக்கின்ற பிரதேசங்களில் உலாவரத் தொடங்கியுள்ளனர்.

அதாவதுமாடிவீட்டு மைனர்கள் போல மக்களை விட்டும் தூரமாக இருந்தவர்கள், இப்போது எங்கவீட்டுப் பிள்ளை எம்.ஜி.ஆர் வேடத்தை தரித்துக் கொண்டுள்ளனர். இந்த தேர்தல் முடியும் வரைக்கும் இ.ந்த வேடமும் தொடரும்.

தேர்தலை இலக்காக வைத்து மக்களை வசியப்படுத்தும் முயற்சிதான் இது என்பது வெளிப்படையானது. தோல்விப் பயத்தில் இருக்கின்ற கட்சிகளும் அரசியல்வாதிகளும் என்ன பொய்யை கூறி, என்ன பிரச்சாரத்தை செய்து மக்களை மீண்டும் ஏமாற்றலாம் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த தருணத்தில் முஸ்லிம் சமூகம் அடுத்த முறை வாக்களிப்பதற்கு இடையில், மன்னிக்கவும் - இன்னுமொரு தடவை ஏமாறுவதற்கு முன்னதாக ஒட்டுமொத்தமான முஸ்லிம் அரசியலின் போக்கு பற்றிய மீள்வாசிப்பை நடத்த வேண்டியிருக்கின்றது.

ஒரு சமூகம், சில முக்கியமான தேவைகளை முன்னிறுத்தி ஒரு அமைப்பை அல்லது பொருளை உருவாக்குகின்றோம் என்றால் அது அரைவாசி அளவுக்காவது அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால்,அதன் பயன்தான் என்ன? முப்பது நாற்பது வருடங்களாக அதற்குப் பின்னால் போவதற்கு சமூகத்திற்கு இருக்கின்ற நிர்ப்பந்தம்தான் என்ன?

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் அவ்வாறான ஒரு உபயோகமற்ற அணுமுறையாக மாறியுள்ளது. பெரும்பான்மை கட்சிகளோடு இணைந்து செயற்படும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் சரி, தனித்துவ அடையாள அரசியலில் பயணிக்கும் அரசியல் கட்சிகள், எம்.பி.க்களும் சரி இந்த வகைக்குள்ளேயே உள்ளடங்குகின்றனர். .

சுதந்திரத்திற்கு பின்னரான காலங்களில் முஸ்லிம்களுக்கு தனித்துவ அரசியல் என்று ஒன்று இருக்கவில்லை. பெரும்பான்மைக் கட்சிகளோடு தேசிய அளவில் சேர்ந்து இயங்கினர். வடக்கு, கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியோடு இணைந்து சிலர் அரசியல் செய்தனர்.

அக்காலத்தில் பெரும்பான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகளாக இருந்த முஸ்லிம் அரசியல்வாதிகளுள் பெயர் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சிலர் சமூகத்திற்கு பல நல்ல காரியங்களைச் செய்தனர் பாக்கீர் மாக்கார், ஏ.சி.எஸ்.ஹமீட்,டீ.பி. ஜாயா எனச் சிலரை இந்தப் பட்டியலில் உள்ளடக்கலாம்.

ஆனால்,கடந்த 30 வருடகாலப்பகுதியில் பெரும்பான்மைக் கட்சிகள் ஊடாக அரசியலைச் செய்கின்ற முஸ்லிம் எம்.பி.க்கள் அவ்விதமான சாதனைகள் எதனையும் சமூகத்திற்குச் செய்ததாக தெரியவில்லை. முஸ்லிம் மக்களோடு, சிங்கள மக்களின் வாக்குகளையும் வசப்படுத்திக் கொண்டு எம்.பி.யாகின்ற வேலையை மட்டும் வருடக்கணக்காக செய்து கொண்டிருக்கின்றனர்.

> **சிறிய அபிவிருத்திகளை செய்வதும் வாயால் வடைசுடுவதுமாக காலத்தைக் கடத்திக் கொண்டு, பெரும்பான்மைக் கட்சிகளின் கிளைக் கட்சிகள் போல செயற்படுகின்ற போக்கு இப்போதாவது மாற வேண்டும்**

இதைவிடப் படுபயங்கரமான தோல்வியை முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியல் அடைந்துள்ளது. எதற்காக முஸ்லிம்களுக்கு என்று ஒரு அரசியல் கட்சி உருவாக்கப்பட்டதோ அந்த இலக்கை மறந்து, தனித்துவத்தை இழந்து, இன்று பெரும்பான்மைக் கட்சிகளின் ஏக முகவர்களாக முஸ்லிம் கட்சிகளும் அதன் எம்.பிக்களும் செயற்படுகின்றனர்.

ஜே.வி.பி. கலவரங்கள், ஜூலைக் கலவரத்திற்குப் பிறகு நாட்டில் நிலைமைகள் மாறின. 80களின் பிற்பகுதியில் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஆயதக் குழுக்கள் தலைதூக்கின. வடக்கு,கிழக்கில் முஸ்லிம்கள் தங்களது இருப்பை பாதுகாப்பதற்கு, அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு தனி வழியொன்றில் பயணிக்க வேண்டிய தேவையை முஸ்லிம் சமூகத்தின் சில முக்கிய செயற்பாட்டாளர்கள் உணர்ந்தனர்.

இங்குதான் முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியல் சிந்தனை தோற்றுவிக்கப்பட்டது. இந்தக் கோட்பாடு மர்ஹு_ம் எம்.எச்.எம். அஷ்ரபுக்கு சொந்தமானது அல்ல. சமூக சிந்தனையாளரும் அரசியல் செயற்பாட்டாளருமான எம்.ஐ.எம். முஹிதீன் இதனை முன்வைத்தார் எனலாம். முன்னாள் அமைச்சர் எம்.எச். சேகு இஸ்ஸதீன் போன்றோர் இதனை அஷ்ரபிடம் போய்ச் சேர வழிவகுத்தனர் எனலாம்.

ஆனால், இந்த சித்தாந்தத்தை முழுமையாக அரசியல் களத்தில் செயற்படுத்தியவர் எம்.எச்.எம். அஷ்ரப் என்ற பெரும் தலைவர்தான் என்பதை மறுக்க முடியாது. தனது சகாக்களுடன் சேர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சியை நிறுவி,தனித்துவ அடையாள அரசியலை முன்கொண்டு சென்றார்.

90களில் விடுதலைத் துப்பாக்கிகள் முஸ்லிம்களை நோக்கி திருப்பப்பட்டன. வடக்கிலும் கிழக்கிலும் பல கசப்பான சம்பவங்கள் நடந்தேறின. இது முஸ்லிம் காங்கிரஸின் அரசியலுக்கு சாதகமான களத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தொழிலற்று இருந்த காலம் என்பதால் எந்தவித எதிர்பார்ப்புமின்றி அணிதிரண்டனர்.

எம்.எச்.எம்.அஷ்ரப் 11 ஆண்டுகள் மட்டுமே எம்.பி.யாக இருந்தார். இதில் அவர் அமைச்சராக இருந்தது வெறும் 6 ஆண்டுகள்தான். ஆனால், இவ்வளவு குறுகிய காலத்திற்குள் அவர் செய்த சேவைகள், அவர் முன்னெடுத்த அரசியலைத்தான் அவர் இறந்து 24 வருடங்களான பிறகும் நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

முதலாவது விடயம் அவர் மக்களை, சமூகத்தை நேசித்தார். இந்த சமூகத்திற்கு எதையவது செய்து விட்டுப் போக வேண்டும் என்ற உணர்வு ஒப்பீட்டளவில் அவரிடமும் அவரோடு அன்று இணைந்து இயங்கியவர்களிடமும் இருந்தது எனலாம்.

முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியலை மிகப் பெரும் பேரம் பேசும் சக்தியாக, ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக மாற்றினார். அபிவிருத்தி அரசியலையும் உரிமை அரசியலையும் அஷ்ரபிற்கு முன்னரும் பின்னரும் எந்த முஸ்லிம் தலைவரும், எம்.பி.யும் செய்யவில்லை.

அவரது மரணத்தோடு முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியலின் தோல்வி ஆரம்பமாகத் தொடங்கி விட்டது. ஒருவேளை அஷ்ரபின் மரணம் திட்டமிட்ட சதியாக இருக்குமென்றால் அதனது நோக்கமும் இதுவாகவே இருந்திருக்கும் என்பதை ஊகிப்பது அவ்வளவு கடினமன்று.

இன்று மூன்று பெரிய முஸ்லிம் கட்சிகளும் சிறு கட்சிகளும் உள்ளன. அதன் ஊடாக கடந்த கால்நூற்றாண்டில் சுமார் 30 இற்கு மேற்பட்டோர் எம்.பி.க்களாக இருந்தனர். ஆளுநராக, முதலமைச்சராக, மாகாண அமைச்சராக இருந்தோரும் உள்ளனர்.

ஆனால், இவ்வளவு பேரும் சேர்ந்து கடந்த 25 வருடங்களாக அரசியல் செய்தும் அஷ்ரபின் இடத்தை அரைவாசி அளவுக்கு கூட நிரப்ப முடியவில்லை என்பதுதான் யதார்த்தமாகும். அவரது சிஷ்யர்கள் என தம்மைக் கூறிக் கொள்ளும் எந்த அரசியல்வாதியும் அவரது முன்மாதிரிகளை பின்பற்றவே இல்லை.

அவரது மரணத்திற்குப் பிறகு தலைவர் பதவியை விரும்பிப் பொறுப்பேற்ற றவூப் ஹக்கீம் இந்த சமூகத்தி;ன் எந்தப் பிரச்சினையை தீர்த்து வைத்திருக்கின்றார்? உண்மையில் அஷரபின் இடத்தை அவரும் மு.கா. எம்;பிக்களும் நிரப்பியுள்ளனரா?

அதேபோல்,அக்கட்சியில் இருந்து பிரிந்து வந்து புதிய கட்சிகளை ஆரம்பித்த தலைவர்களான றிசாட் பதியுதீன்,அதாவுல்லா மற்றும்மறைந்த தலைவரோடு நெருக்கமாக இருந்து அரசியல் கற்ற முன்னாள், இந்நாள் முஸ்லிம் எம்.பி.க்கள் உரிமை அரசியலில் சாதித்திருக்கின்றார்களா? முஸ்லிம் அரசியலை முன்னோக்கி நகர்த்தியிருக்கின்றார்களா? எதுவுமே இல்லை.

நாட்டில் முன்பு ஒரு நிறுவனம் இருந்தது. அது நாடுபூராகவும் நேரடியாக தனது பொருட்களை விற்பனை செய்தது. பின்னர் பிராந்திய நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இப்போது அந்த தேசிய நிறுவனம், பிராந்திய நிறுவனங்களை முகவர்களாக பயன்படுத்தி பொருட்களை இலகுவாக சரக்குகளை விற்கின்றனர். அதுதான் முஸ்லிம் அரசியலுக்கும் நடந்துள்ளது.

ஆக,தனித்துவ அடையாள அரசியல் என்ற போர்வையை போர்த்திக் கொண்டு, அதனை சரியாகப் பயன்படுத்தி சமூகத்தின் எந்த முக்கிய பிரச்சினைகளையும் தீர்க்காமல் வெறுமனே சிறிய அபிவிருத்திகளை செய்வதும் வாயால் வடைசுடுவதுமாக காலத்தைக் கடத்திக் கொண்டு, பெரும்பான்மைக் கட்சிகளின் கிளைக் கட்சிகள் போல செயற்படுகின்ற போக்கு இப்போதாவது மாற வேண்டும்.

## கடிதங்கள்

### பாலம் புனரமைக்கப்பட வேண்டும்



அம்பாறை கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாலம் புனரமைக்கப்படாமல் காணப்படுவாதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பாலத்தினூடாக அதிகளவானோர் பயணம் மேற்கொள்வதாகவும்

இரவு வேளையில் எவ்வித மின் ஒளியும் இன்றி இருளில் மூழ்கி காணப்படுவதனால் மாற்று பாதைகளை பாதசாரிகள் பயன்படுத்துவதை காண முடிகின்றது.

இப்பாலம் குறித்து மக்கள், பல அதிகாரிகளிடம் தெரிவித்தும் இப்பிரச்சினைக்கு தீர்வை பெற்று தராத நிலை காணப்படுகிறது.

இவ்விடயம் குறித்து உரிய அதிகாரிகள் பல்வேறு காரணங்களை கூறிவருகின்ற நிலையில் இந்த பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்க முன்வர வேண்டும் என சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- பாறுக் ஷிஹான்



# தம்பானையில் ஒரு நாள்





மரியசெல்வம் ஜோய் எந்தனி
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
(ஏப்ரல் 1ஆம் திகதிய தொடர்ச்சி)

அடர்ந்த காட்டுக்குள் ஒரு குளிர்ச்சியான வீடு. மனதுக்கு இதமானதொரு நிம்மதியைத் தந்தது.

வீட்டிற்கு அருகே வித்தியாசமானதொரு லாம்பு இருந்தது. அதைப்பற்றி அங்கு அமர்ந்திருந்தவரிடம் வினவிய போது அவர் அது ஆதிகாலத்தில் காட்டுப்பயணங்களை மேற்கொள்ளும் போது பயன்படுத்தியது என்றும் லாம்பு மிகவும் சக்தி வாய்ந்தது.

இங்கு சுற்றி காணப்படும் எல்லா வீடுகளிலும் கட்டாயம் இருக்கும் என்றார். அங்கு மக்கள் அனைவரும் சற்றுத் தூரம் தள்ளி வேறு வீடுகள் கட்டிக் கொண்டு சென்றுவிட்டார்கள் எனவும் ஒவ்வொரு நாளும் காலை 9 மணி அளவில் அந்த இடத்திற்கு குறிப்பிட்ட சிலர் பெரும்பாலும் ஆண்கள் வருகை தருவார்களாம். ஏனெனில் சுற்றுலாப்பயணிகள் வருகை தரும்போது அவர்கள் பார்வையிடுவதற்கு அந்த இனமக்கள் அங்கு இருக்க வேண்டும் என்பதற்காக காலை வருகை தந்து மாலை வீடு திரும்பி விடுவார்கள் எனவும் கூறினார்.

வேடுவ குலத்தலைவர் “நாங்கள் ஒரு பக்கம் மற்ற மனிதர்களைப் போல் வாழப்பழகி உள்ளமை சந்தோஷமாக இருந்தாலும் ஒரு சில வருடங்கள் கழித்து இந்த இடம் தடையமின்றி அழிந்துவிடுமே என்ற பயம் என் மனதில் ஆழமாக உள்ளது” என்றார்.

அவருடைய மனைவி இரண்டு வருடங்களுக்கு முன் இறந்து விட்டதாகவும் தனக்குப் பின் அவருடைய மகன் இந்த இனத்தின் தலைவனாக இருப்பார் என்பதையும் பெருமையாக கூறினார். வேடுவ குலத்தினுடைய தொழிலாக காணப்படுவது வேட்டையாடுதலே. ஆனால் தற்போது விலங்குகளை வேட்டையாடுவதுமில்லை ஏனெனில் விலங்குகளை வேட்டையாடுவது சட்டவிரோதமான செயல் என்பதால் தற்போது வேட்டையாடுதலையும் அவர்கள் நிறுத்தி விட்டனர்.

மேலும் சுற்றுலாப்பயணிகளின் வருகை ஏன் குறைந்தது என வினாவிய போது நாங்கள் இப்போது நவீனமடைந்து கொண்டு வருவதால் பெரிதாக பார்வையிடுவதற்கு வருவதில்லை, மேலும் எங்கள் இன மக்கள் அனைவரும் வேறு இடங்களில் இடம்பெயர்ந்து விட்டதால் நானும் அதை தடுப்பதில்லை. சில வருடங்களுக்குப் பிறகு அவர்களாவது நல்ல நிலையில் இருப்பார்கள் என்பது என்னுடைய நம்பிக்கை என்று வேடுவ குலத்தலைவர் கூறினார்.

எனக்கு ஒரே ஒரு ஆச்சரியம் அதிகமாக பாதித்தது. பெண்களையே காணக் கிடைக்காத இடத்தில் பெண்கள் எல்லோரும் கூடி வெளி உலகத்திற்கு நவீனமயப்படுத்தப்பட்டிருந்த விதம் வியப்பில் ஆழ்த்தியது. நவீனமயப்படுத்தப்பட்ட வீடுகள் அவர்களுடைய கலாசார மாற்றங்கள் இவைகளைப் பற்றி வேடுவ குலத்தலைவரிடம் கேட்டபோது அவர் இப்போதெல்லாம் நாங்கள் தனியாக வாழ முடியாத சூழலில் இருக்கின்றோம். எங்களுக்கு அடுத்து வரும் பரம்பரை இதே நிலையில் எங்களது கலாசாரத்தை கட்டி காப்பாற்றுமா? என்பது கேள்விக்குறியான விடயமாக காணப்படுகின்றது. காட்டுத்தேனை மாத்திரம் வியாபாரம் செய்து வாழ்வது சற்று கடினமான விடயம் என்பதால் நவீனமடைதலை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றார்.

எனது நண்பி அவள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவள், சிங்களத்தில் வேடுவத் தலைவர் பேசிக்கொண்டிருக்கும் போது எனக்கு எதுவும் விளங்கவில்லை என என்னிடம் கூறியதும் அவருக்கு கேட்டு விட்டது. உடனேயே தமிழில் இரண்டு, மூன்று வார்த்தைகளை பேசத் தொடங்கி விட்டார். அவளுக்கு ஒரே ஆச்சரியம். பொதுவாகவே சிங்கள மக்கள் தமிழ் பேசுவது குறைவு. அதிலும் சிங்கள ஆதிவாசிகள் தமிழ் பேசுவது என்பது பாராட்டத்தக்க விடயமாக எனக்குத்தோன்றியது. பின்பு அவர் புத்தகசாலை ஒன்றும் இருப்பதாக கூறினார். அதையும் ஆர்வத்தோடு பார்வையிட்டோம். அங்கு பழங்குடியினர் அவர்களுடைய சம்பிரதாயங்கள், வாழ்க்கை முறை, வரலாறு என்பவற்றை பற்றி பல புத்தகங்கள் அங்கு காணப்பட்டது.

மேலும் வேடுவர்களை சிங்களத்தில் “வன்னியலத்தோ” என அழைப்பார்கள். இவர்களில் இறந்தவர்களை தெய்வமாக வழிபடும் முறை அங்கு காணப்படுகின்றது.

அவர்கள் சிலை செய்து வழிபடுவது தற்போது வேடுவத் தலைவராக காணப்படுபவரின் தந்தையை சிலையாக வடிவமைத்து அவரைத் தெய்வமாக நினைத்து கோவில் போல் அந்த சிலையைச் சுற்றி கட்டி வைத்திருந்தனர்.

அருகாமையில் சென்று பார்வையிடலாமா என அனுமதி கேட்டு சென்று பார்த்தோம். முற்று முழுதாக மண்ணிலேயே செய்யப்பட்டது. மிகவும் தத்ரூபமாக காணப்பட்டது. வேடுவ குலத்தினை சேர்ந்த ஒருவரால் இந்த சிலை செய்யப்பட்டதாக கூறினார்கள்.

நீங்கள் கொண்டாடும் பண்டிகை பற்றி கூற முடியுமா? ஏன் வினாவிய போது அவர்கள் வருடத்திலேயே சந்தோஷமாக இருப்பதே அந்த ஒரு சில நாட்கள் தான். சமூக ஒன்று கூடலாகவும் சமயச் சடங்காகவும் அது காணப்படும். சடங்கு வழிபாட்டில் இயற்கைக்கு தெய்வ சக்தியை கற்பிதம் செய்து வழிபடுகின்றோம். இயற்கையுடன் தெய்வங்களின் உருவத்தை வைத்து வழிபடும் வழக்கம் வேடுவர்களின் வழிபாட்டின் பிரதானம் பெறுவதில்லை. நாங்கள் இயற்கையின் சக்திகளை தெய்வ இயல்புடைய வகையாக கருதி வழிபடுகின்றோம். சடங்கு வழிபாடு முடிவடைந்ததும் சடங்குக்காக அமைக்கப்பட்ட கட்டுமானம், சடங்குப் பொருட்கள் யாவற்றையும் குறித்த சடங்கு நடைபெற்ற இடத்தில் கைவிட்டு செல்வதனை பொது வழக்கமாகக் கொண்டுள்ளோம். அடுத்த வருடம் சடங்கிற்காக மீண்டும் எல்லாவற்றையும் உருவாக்குவோம்.

வேறு வேறு இடங்களில் வசிக்கும் வேடுவர்கள் வருகை தருவார்கள். குறிப்பிட்ட நாட்களுக்கு பெண்களுக்கு எந்த விதமான கட்டுப்பாடும் இல்லை. வீட்டுக்கு வெளியே இருக்கலாம். அவர்கள் கூறும் ஒவ்வொரு விடயங்களும் கேட்பதற்கு ஆச்சரியமாகவும் சுவாரசியமாகவும் இருந்தது. இடையில் நான் ஒரு மொழிபெயர்ப்பாளராகவும் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நண்பிக்கு சிங்களம் தெரியாததால் வேடுவகுல தலைவர் அவர் மொழியில் சிங்களம் பாதி, வேடுவமொழி பாதி கலந்து





பேசினார். அதை எங்களோடு வந்திருந்த முச்சக்கரவண்டி ஓட்டுநர் அவர் சொந்த இடம் மகியங்கனை என்பதால் தம்பானை அமைந்திருக்கும் பிரதேசம், அவர்களுடைய மொழி அவருக்கு பரீட்சயமாக இருந்தது.

அவர் சிங்களத்தில் எனக்குக் கூறினார். நான் அதை தமிழில் எனது நண்பிக்கு கூறினேன். இவ்வாறு எங்களுடைய கலந்துரையாடல் நீண்டு கொண்டே சென்றது.

வாழ்வியலை புகைப்படம் எடுப்பதற்காகத்தான் வந்துள்ளோம் என்பதையும் மறந்து இருவரும் கதை கேட்டுக் கொண்டிருந்தோம். முச்சக்கரவண்டி சாரதி வேடுவ குலத்தலைவரை வன்னியலத்தோ என மிகவும் மரியாதையுடன் உரையாடினார்.

வேடுவ குலத்தலைவரோடு கூடவே ஒரு நபர் இருந்தார். அவர் சாதாரணமாக உடை அணிந்து இருந்ததால் எனக்காரு சந்தேகம் ஏற்பட்டது. வேடுவ குலத்தலைவர் செல்லும் இடமெல்லாம் தொடர்ந்து கொண்டே இருந்தார். நானும் இதை வெகுநேரமாக கவனித்துக் கொண்டிருந்தேன்.

ஒரு கட்டத்தில் நான் முச்சக்கர வண்டி சாரதியிடம் ஏன் வேடுவ குலத்தலைவர் செல்லும் இடமெல்லாம் பின் தொடர்கிறார் என வினாவிய போது அவர் ஒரு அரசாங்க பொலிஸார் எனவும் வேடுவ குலத்தலைவருக்கு 24 மணித்தியாலங்களும் பாதுகாப்பு தருவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார், அவரிடம் துப்பாக்கியும் காணப்படுகிறது.

ஏனெனில் அவர்இலங்கையில் இருக்கும் மூத்த வேடுவத்தலைவர். அவரைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகக் காணப்படுகின்றது என்றார்.

உண்மையில் எங்களுக்கு பெருமையாக இருந்தது. இப்படிப்பட்ட ஒருவருடன் உரையாடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்பதில் நேரம் போனதே எங்களுக்கு தெரியவில்லை.

மாலையாகி விட்டது என்பதால் வேடுவ குலத்தலைவருடன் புகைப்படங்களை எடுத்துக்கொண்டு அவரிடம் காட்டுத்தேன் போத்தல்களையும் விலைக்கு வாங்கிக்கொண்டு விடை பெற்றோம்.

முச்சக்கரவண்டியில் திரும்பிப் போய்க் கொண்டிருக்கும் போது ஆறு வருடங்களுக்கு முன்பு இருந்த அந்த இடத்திற்கான சிறப்பு, தனித்துவம் அனைத்தையும் தம்பானை இழந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருந்தேன். இடையில் பசி எடுத்ததால் சிற்றுண்டிச்சாலை முன் முச்சக்கரவண்டியை நிறுத்திவிட்டு உள்ளே சென்றோம். அங்கு பெரிய ஆச்சரியமான விடயம் ஒன்றைக் கண்டேன்.

வேடுவ குலத்தலைவருடைய புகைப்படம் பெரிதாக அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அப்பொழுது முச்சக்கரவண்டி சாரதி எங்களிடம் இங்கு உள்ள பெரிய கடைகளிலும் சரி, சிறிய கடைகளிலும் சரி “வன்னியலத்தோ” அவர்களுடைய புகைப்படம் இருக்கும். அவர் “எங்கள் ஊரிற்கே ஓர் அடையாளம்” என்றார். சற்றுமுன் முச்சக்கரவண்டியில் வரும்போது எண்ணிக்கொண்டிருந்த கருத்து மாறியது “தம்பானை வெறும் இடமல்ல அழிந்து போவதற்கு அது ஓர் அடையாளம்” என்பதை உணர்ந்தேன்.



# மீண்டும் சிம்பு த்ரிஷா ஜோடி



மணிரத்னம் இயக்கத்தில் நடிகர் கமல்ஹாசன் ‘தக் லைப்’ என்கிற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில் சிலம்பரசன், துல்கர் சல்மான், ஜெயம் ரவி, கௌதம கார்த்திக், த்ரிஷா, ஐஸ்வர்யா லஷ்மி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

தற்போது இந்த படத்தில் கமல் அல்லாத படப்பிடிப்பு ராஜஸ்தானில் உள்ள ஜெய் சல்பர் எனும் பகுதியில் நடத்தப்படுகின்றது.

இந்த நிலையில் இந்த படத்தில் சிம்புவுக்கு ஜோடியாக த்ரிஷா நடிப்பதாக படக்குழு வட்டாரத்தில் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே அலை, விண்ணைத்தாண்டி வருவாயா ஆகிய படங்களில் சிம்பு, த்ரிஷா ஜோடியாக நடித்தனர். நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இந்த ஜோடி இணைந்து நடிக்கின்றனர் என ரசிகர்கள் உற்சாகமாக உள்ளனர்.

# விஜய்யின் அரசியலால் நொறுங்கிய கனவு



வெங்கட் பிரபு இயக்கத்தில் நடித்து வரும் கோட் படத்தையும் அதன் பிறகு இன்னொரு படத்தையும் முடித்துவிட்டு 2026 சட்டசபை தேர்தலில் களமிறங்க போவதாக நடிகர் விஜய் அறிவித்து விட்டார்.

இன்னொரு பக்கம் நடிகர் விஷாலும் வரும் 2026ல் தானும் அரசியலில் இறங்கப் போவதாக அறிவித்து அதிர்ச்சி அளித்தார்.

இந்த நிலையில் விஜய் அரசியலில் இறங்கியதால் தான் நீங்களும் அரசியலில் இறங்குகிறீர்களா என்று அவரிடம் ரத்னம் படத்தின் பத்திரிக்கையாளர் சந்திப்பில் கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த விஷால், “அப்படி இல்லை, விஜய்யை எனக்கு ரொம்பவே பிடிக்கும். அவரை வைத்து ஒரு படம் இயக்க வேண்டும் என நான் கனவு கண்டு கொண்டிருந்தேன். அவர் இன்னும் ஒரு படத்தில் மட்டும் நடித்துவிட்டு அரசியலுக்கு வர இருப்பதால் என்னுடைய கனவு நிறைவேறாமல் போகிறதே என்கிற வருத்தம் இருக்கிறது” என்று கூறியுள்ளார்.




# ரஜினி படத்தில் நாகார்ஜுனா!

ஞானவேல் இயக்கும் வேட்டையன் படத்தில் நடித்து வருகிறார் ரஜினி. இந்த படத்தில் அவருடன் அமிதாப்பச்சன், பஹத் பாசில், ராணா, மஞ்சு வாரியர், ரித்திகா சிங், துஷாரா விஜயன் உள்ளிட்ட பலர் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள்.

இந்த படத்தை அடுத்து லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் படத்திலும் வேட்டையன் படத்தை போலவே பல மொழிகளை சார்ந்த நடிகர் நடிகைகளும் இடம் பெறப் போகிறார்கள்.

அப்படத்தில் ரஜினியுடன் பாலிவுட் நடிகர் ரன்வீர் சிங், மலையாள நடிகை ஷோபனா, தமிழ் நடிகை ஸ்ரூதிஹாசன் ஆகியோர் நடிப்பதாக செய்திகள் வெளியாகி வந்த நிலையில், பின்னர் சத்யராஜ் நடிப்பதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில், தற்போது தெலுங்கு நடிகர் நாகார்ஜுனாவும் ரஜினி 171வது படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்க இருப்பதாக ஒரு புதிய தகவல் வெளியாகியிருக்கிறது.



# சூர்யாவுக்கு ஜோடியாக ஜோதிகா

பூவெல்லாம் கேட்டுப்பார், உயிரிலே கலந்தது, காக்க காக்க, மாயாவி, பேரழகன் ஆகிய படங்களில் நடிகர் சூர்யா, நடிகை ஜோதிகா இணைந்து நடித்தனர்.

கடைசியாக இருவரும் இணைந்து சில்லுனு ஒரு காதல் படத்தில் இணைந்து நடித்து பின்னர் திருமணம் செய்து வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த சில வருடங்களாக ஜோதிகா கதாநாயகி மற்றும் முதன்மை கதாபாத்திரம் கொண்ட படங்களில் மட்டும் நடித்து வருகிறார். இப்போது பல வருடங்களுக்கு பிறகு சூர்யா, ஜோதிகா இருவரும் இணைந்து புதிய படம் ஒன்றில் நடிக்கவுள்ளனர்.

இந்த படத்தை




இயக்குவதற்கான வாய்ப்பை பெங்களூரு டேஸ்’ இயக்குநர் அஞ்சலி மேனன் மற்றும் சில்லுக்கருப்பட்டி பட இயக்குனர் ஹலிதா ஹமிம் என இருவரில் ஒருவர் இயக்க வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

# இறுதிகட்டத்தில் மண்ணாங்கட்டி

நடிகை நயன்தாரா தற்போது அறிமுக இயக்குநர் ரூட்’ விக்கி இயக்கும் ‘மண்ணாங்கட்டி சின்ஸ் 1960’ எனும் படத்தில் முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்கின்றார். நயன்தாரா, யோகி பாபு என இருவரும் கோலமாவு கோகிலா படத்திற்கு பிறக்கு இந்த படத்தில் இணைந்து நடிக்கின்றனர். சான் ரோல்டன் இசையமைக்கும் இந்த படத்தை பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கின்றனர். ஏற்கனவே இதன் படப்பிடிப்பை கடந்த சில மாதங்களாக சென்னையில் அரங்கம் அமைத்து நடத்தி வந்தனர். தற்போது இப்படத்தின் படப்பிடிப்பு இறுதிகட்டத்தை எட்டியுள்ளது. இன்னும் நயன்தாரா சம்மந்தப்பட்ட காட்சிகள் 15 நாட்கள் படமாக்கினால் படப்பிடிப்பு நிறைவு பெறும் எனக் கூறப்படுகிறது.






சுவாமி விபுலானந்தர் துறவறம் பூண்டு

# இன்றுடன் 100 ஆண்டுகள்

## துறவற நூற்றாண்டு விழா காரைதீவில் இன்று அங்குரார்ப்பணம்

விபுலமாமணி வித்தகர் வி.ரி. சகாதேவராஜா,
ஆலோசகர் ,சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றம்,
காரைதீவு.



"ஈழம் முதல் பனி இமயம் வரை கொடி கட்டும் இசைத்தமிழன்" என்று புலவர் மணி பண்டிதர் ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களால் புகழப்பட்ட முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு(1924-2024) இன்று(23.04.2024) ஆரம்பமாகின்றது.

ஆம்,உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் துறவறம் பூண்டு(23.04.2024) இன்றுடன் 100 ஆண்டுகள் ஆகின்றன.

1924 ஆம் ஆண்டு சித்ரா பௌர்ணமியில் சுவாமிகள் தான் வாழ்ந்த 55 வருடத்துள் தனது 32 ஆவது வயதில் பண்டிதர் மயில்வாகனன் என்ற நாமத்திலிருந்து சுவாமி விபுலானந்தர் என்ற உலகப்புகழ் பெற்ற மந்திர சக்தியுடைய நாமத்தை தாங்குகிறார்.

சித்திரா பௌர்ணமி என்பது சித்திரை மாதம் பௌர்ணமி திதியில் சித்திரை நட் சத்திரமும் கூடி வருவதால் சித்திரா பௌர்ணமி என அழைக்கப் பெறுகின் றது. மாதத்தின் பெயரும் நட்சத்திரத்தின் பெயரும் ஒன்றாகி சூரியன் உச்ச பலம் பெறும் மேட இராசியில் வரும் பௌர்ணமி தினம் சிறப்புப் பெறுகின்றது.

இச்சித்திரா பௌர்ணமி விரத நாளிலேயே எமனின் சபையில் நம் பாவ புண்ணியக்கணக்கை இம்மியும் பிசகாமல் எழுதும் சித்திரகுப்தன் அவதரித்த நாளாகவும் இது கருதப்படுவதால் சித்திர புத்திரனார் விரதமும் அமை கின்றது.

சித்ரா பௌர்ணமி ஒரு தனிநபரின் நல்ல செயல்கள் மற்றும் தீய செயல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்பர்.

அப்படிப்பட்ட உன்னதமான தினத்தில் சுவாமி காவியுடை தரித்து பெரும் துறவியானார். ராமகிருஷ்ண மடாலயத்தின் சுவாமி சர்வானந்தரின் இலங்கை விஜயம் மயில்வாகனன் வாழ்வில் மகத்தான மாற்றத்திற்கு வழி கோலியது.

அதுமட்டுமின்றி 1920-1922 களில் யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபராக சேவையாற்றிய காலம். அங்கு அவருக்கு உற்றநண்பராக விளங்கியவர் மு. திருவிளங்கம் என்பவராவார்.

திருவிளங்கம் அவர்கள் எதிர்பாராத வகையில் காலமானார்.இவரின் இழப்பு, மயில்வாகனனாரின் உள்ளத்தில் தீவிரமானதுறவு நாட்டத்தை ஏற்படுத்தியது. அவ்வேளையில் யோகர் சுவாமிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

உலகியலில் சலிப்புற்ற இவர் தமது பதவியைத் துறந்து 1922 இல் இராமகிருஷ்ண மடத்தில் இணைந்து கொண்டார்.


1924 இல் சித்திராபௌர்ணமி தினத்தில் இராமகிருஷ்ண மடத்தின் தலைவராகவும் , இராமகிருஷ்ண பரமஹம்சரின் நேரடிச்

சீடர்களுள் ஒருவராக விளங்கிய சுவாமி சிவாநந்தரிடம் ஞானோபதேசம் பெற்று பிரபோதசைதன்யர் என்ற பிரம்மச்சரிய ஆச்சிரம நாமத்தை விட்டு சுவாமி விபுலாந்தர் என்னும் துறவறத் திருநாமத்தைச் பெற்றார்.

"ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல "
என்னும் வாக்கிற்கிணங்க துறவறமெய்தினார்.

கிழக்கின் காரைதீவு மண்ணில் 1982.03.27 ஆம் திகதி அவதரித்த சுவாமியின் வாழ்க்கையின் திருப்பு முனையான காலமாய் அமைந்தது துறவறத்தின் பின்னராகும்.

மயில்வாகனன் என்ற நாமத்துடன் இலண்டன் பல்கலைக்கழக அறிவியல் பட்ட தாரியாய் , மதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதராய் மேல்நாட்டு உடையுடன் கம்பீரமாக இருந்த கோலம் மாறி காவிஉடை தரித்து , தாமரை இலைமேல் நீர் போன்ற நிலைக்குள் வந்து துறவியாய் பிறப்பெடுத்த நாள் இன்றைய சித்திரா பௌர்ணமி தினம் எனலாம்.



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின்
துறவற நூற்றாண்டு 1924 - 2024

வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த
மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த
மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார்
வேண்டுவது

என்று சிந்திக்கும் நிலையினை அடைந்த காலம்தான் துறவுக்காலம்

இல்லறத்தில் இணைந்திருந்தால் காரைதீவின் மைந்தன் மயில்வாகனன் குடும்பஸ்தனாகி குழந்தைகளுடன் குடித்தனம் நடத்தி சாதாரண மானவராகவே மறைந்திருப்பார். ஆனால் உலகம் போற்றும் பெருமகனாராக விளங்க வைத்தது இத்துறவுநிலை எனலாம்.

சுந்தரரை இல்லறத்தில் இணைய விடாமல் எம்பெருமான் தடுத் தாட்கொண்டார். அரச போகத்தில் இருந்த சித்தார்த்த கௌதமர் இல்லறத்தை ஒதுக்கி இறைஞானம் பெற்றார். அதே போன்ற ஒரு நிலையினையே மயில்வாகனுக்கும் கிடைத்தது எனலாம் . எல்லாமே இறைசித்தம்.

விஞ்ஞானம் படித்தவர் மெஞ்ஞானத்துள் மூழ்கிறார்.தமிழை மூச்சாக்கி நிற்கின்றார்.சமரச சன்மார்க்கத்தின் வழியில் பயணிக்கிறார். ஆனால் சைவத்தைக் கைகளில் ஏந்துகிறார். இவையெல்லாம் துறவால் விளைந்த விளைவுகள் என்றே எடுத்துக் கொள்ளல் வேண்டும்.





23 வருட துறவு வாழ்க்கை அவரை உலகின் உச்சத்திற்கு கொண்டு சென்றது.துறவறத்தின் பின்னர்தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதற் தமிழ்ப்பேராசியராகிறார்.இந்தியா தமிழ் நாட்டில் தமிழ் அறிஞர்கள் பலபேர் இருந்தும் - ஈழத்து மைந்தனை எப்படித் தமிழ்ப் பேராளுமையாக அண்ணாமலைச் செட்டியார் கண்டுகொண்டார் என்றால் - அதுதான் துறவறத்தின் வலிமை எனலாம்.

உலகியல் பற்றுக்களையும் அறுத்த சுவாமி மொழியில், சமயத்தில், கலாசாரத்தில், பண்பாட் டில், ஆராய்ச்சியில், சமூகத்தொண்டில் ,இசையில் , நாடகத்தில் , கொண்ட பற்றுக்களை இழந்தாரில்லை.அவற்றில் அவரின் பற்றானது பல்கிப் பெருகி பயனளிக்கும் வகையில் அமைந்தது எனலாம். இவையாவும் துறவு வாழ்க்கையின் பின் துலங்கியது என்பது தான் மிகவும் முக்கியமாகும்.

எவருமே தொடாத துறை எவருடைய ஆராய்ச்சிக்கும் எட்டாத துறை. அந்தத்துறையினைத் தொட்டிருக்கிறார் எங்கள் விபுலானந்தத்துறவி இப் பேராய்ச்சி மலர்ந்ததும் முத்தமிழ் வித்தகரின் துறவின் பின்தான் என்பதும் மனங்கொள்ளத்தக்கதாகும்.

நரேந்திரன் விவேகானந்தர் ஆனபின்தான் இராமகிருஷ்ண அமைப்பே உருவாகியது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை பல நிலையிலும் நிலை நிறுத்துகிறார். இந்த வழியினை எங்கள் முத்தமிழ் முனிவரும் மனத்தினில் பதிக்கிறார்.

வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் எப்படி துறவறத்தின் பின் எவ்வாறு துலங்கினாரே அப்படியேதான் வித்தகரும் துறவுக்குப்பின் துலங்கி நின்றார் எனலாம்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முதல்தமிழ் பேராசிரியரான பின்னர் இலங்கை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராயும் அணி செய்கின்றார்.

இலங்கையில் பல பகுதிகளில் கல்விக்கூடங்களை நிறுவினார். ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளிவிளக்கை ஏற்றிவைத்தார்.இலக்கிய கட்டுரைகள், சமயசன்மார்க்கக் கட்டுரைகள் , ஆராய்ச்சி நூல்கள், மாநாடுகள் பலவற்றில் பேருரைகள், என்றுமே பயன்தரும்வகையில் பல நயமிக்க , பொருள் பொதிந்த கவிதைகள், கவிதை நூல்கள், என்று பல்துறைகளில் - பன்முக ஆற்றல்களை வெளிப்படுத்திய காலம் முத்தமிழ் வித்தகரின் துறவுக்காலமேதான் .

அதனால்தான் அவருக்கு விழாக்கள் எடுக்கிறோம். அவருக்குச் சிலை எடுக்கிறோம். அவர்பற்றிய மலர்களையும் வெளியிடுகிறோம். துறவு என்றால் காட்டுக்குள் ஓடுவதல்ல. துறவு என்றால் சமூகத்தைவிட்டு ஒதுங்கி நிற்பதும் அல்ல. துறவு என்றால் காவியை அணிந்து மொட்டை அடித்து மௌனமாய் குகைக்குள் புகுந்து இருப்பதும் அல்ல. மக்கள் மத்தியில் வாழவேண்டும். மக்களுக்கு ஏற்ற சேவைகளைச் செய்ய வேண்டும். மொழியை, பண்பாட்டை, கலாசாரத்தை, சமயத்தை, சன்மார்க்கத்தை, அறிவியலை, சமூகத்துக்கு எப்படியாயினும் கொடுக்க வேண்டும் என்பதை துறவின் வழியில் நின்று சாதித்தார் என்று அவுஸ்திரேலிய அறிஞர் ஜெயராமசர்மா குறிப்பிடுகிறார்.

இத் துறவற நூற்றாண்டு விழா காலத்தில் அவர் தம் பணிகள் அவனியில் மேலும் வியாபித்து மிளிர வேண்டும்.

---

மலையகம் தந்த

# மறவாத நினைவலைகள்



ச.பிரியதர்ஷன் குரூஸ்
(கோல்டன்)
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



(திங்கட்கிழமை (22) தொடர்ச்சி)

ஏனென்றால் நாங்கள் அங்கு சென்ற நேரம் இரவு என்பதால் அங்கு தெளிவான குழுப்புகைப்படம் ஒன்றினை எடுக்கமுடியாமல் போய்விட்டது. இதனால் காலையில் மீண்டும் தலதாமாளிகை சென்று எங்கள் நினைவுகளை புகைப்படமாக பதிவு செய்தோம்.

பின்னர் அங்கிருந்து நெல்லிகலா சர்வதேச புத்த மையம் நோக்கி பேரூந்து பயணித்தது. அப்போது அந்த விகாரை சற்று உயரத்தில் இருப்பதனால் அந்த ஏற்ற இறக்கமான பாதையில் பயணிப்பதற்கு பேரூந்து மிகவும் சிரமப்பட்டது. இதனால் நாங்கள் அனைவரும் பேரூந்திலிருந்து இறங்கி அந்த ஏற்ற இறக்கமான பாதையின் வழியே நடந்து சென்றோம். இவ்வாறு பாதையில் ஏறும்போது பெரும் சிரமப்பட்டாலும் நண்பர்களின் பகிடிக்கதைகள், கிண்டல்கள், சிரிப்புகள் எல்லாம் அந்த வேளையில் எங்களோடு வலம் வந்தன. பாதையின் இறக்கங்கள் வரும்போது எங்களை அறியாமலே நாங்கள் கீழே ஓடத் தொடங்கி விட்டோம். இவ்வாறு சிரித்து கதைத்து நகர்கின்ற போது அந்த விகாரையும் வந்துவிட்டது.

பல பக்தர்கள் வெள்ளை ஆடைஅணிந்துகற்படியால் மேலே ஏறிச்சென்று கொண்டே இருந்தார்கள். அவர்களை பின் தொடர்ந்து நாங்களும் பயணித்தோம். ஆங்காங்கே சிறு சிறு விகாரைகளும், கோபுரங்களும் இருப்பதை பார்த்தோம். மேலே இருந்து கீழ்பார்வைக் கோணத்தில் பார்க்கின்ற போது மலைச்சாரலும், ஒரு புறம் வீடுகளுமாய் காணப்பட்டன. பொன் முலாம் இடப்பட்ட பல புத்தர் சிலைகள்; ஒரே வரிசையில் நிறுத்தப்பட்டிருந்தமை மிகவும் அழகாக இருந்தது.நெல்லிகலா விகாரையைப் பற்றிய சிறு அறிமுகத்தை என் நண்பன் மற்றும் நண்பியை கூறவைத்து அதனை யூடியூப் வலைத்தளத்தில் இடுவதற்கு காணொளி ஒன்றினையும் அங்கு வைத்துப் பதிவு செய்தேன். அந்த விகாரையை முற்று முழுதாக சுற்றிப் பார்த்துவிட்டு சென்ற இடமெல்லாம் சிறு காணொளிகளை எனது தொலைபேசியில் பதிவு செய்துவிட்டு மீண்டும் எனது நண்பர்களோடு இணைந்தேன்.

பின் அனைவரும் ஒரு கடையினை நோக்கி புறப்பட்டு அங்கு எம்முடைய மதிய உணவை முடித்துக் கொண்டு கண்டியில் உள்ள ஒரு பிரபல சுற்றுலாத்தலமான அம்புலுவாவ கோபுரம் நோக்கி பயணித்தோம். அங்கு பயணித்த நாங்கள் சில மணிநேரங்களின் பின் அம்புலுவாவ கோபுரத்திற்கு வந்து விட்டோம். அந்த அம்புலுவாவ கோபுரம் மிக உயரத்தில் இருப்பதனால் குழுவாக இணைந்து முச்சக்கரவண்டியில் செல்லுமாறு அங்கிருந்தவர்கள் கூறினார்கள். இருந்தும் அத்தனை தூரங்களும் நடந்து போக வேண்டும் என்றுநானும் எனது நண்பர்களும் இணைந்து அத்தனை தூரங்களும் நடந்து சென்றோம்.

செல்கின்ற வழியில் பல்வேறு சிரிப்புகள், பகிடிகள் என மலை வழியாக நகர்ந்து கொண்டிருந்தது எங்களது பயணம்.

ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு பின்னர் அனைவருமே களைத்து விட்டதனால் மலையேற முடியாமல் அவற்றில் உள்ள குன்றுகளிலே உட்காரத் தொடங்கி விட்டோம். இருந்தும் எப்படியாவது அங்கு செல்ல வேண்டும் என்று கைகளை கோர்த்துக்கொண்டு நண்பர்களின் உதவியுடன் மேலே மேலே சென்று கொண்டிருந்தோம் இவ்வாறு பயணித்துக் கொண்டிருக்கும் போது அங்கு வருபவர்களிடம் இன்னும் எவ்வளவு தூரங்கள் இருக்கின்றன? என்ற கேள்விகளை நண்பர் வட்டாரம் மாறி மாறி அங்கிருந்து வருபவர்களிடம் கேட்டுக் கொண்டே இருந்தார்கள்.

இவ்வாறு இறுதியில் ஒரு மாதிரியாக அனைவரையும் இழுத்துக் கொண்டு சென்று அந்த கோபுரத்தை எட்டிவிட்டோம். கோபுரத்தின் அருகில் சென்று மேலே அண்ணார்ந்து பார்த்தால் தலை சுற்றுகிறது. அந்த அளவிற்கு உயரமான கோபுரம் அது. அங்கிருந்து வந்த தூரத்திலேயே களைத்து விட்டோம், இப்போது இந்த கோபுரத்தில் எவ்வாறு ஏறுவது என்று ஓர் எண்ணம் மனதில். இருந்த போதும் இந்த கோபுரத்தின் உச்சத்தை தொட்டு பார்த்து விட வேண்டும் என்ற ஆர்வத்தில் நண்பர்களின் உதவியோடு கோபுரத்தில் ஏறுவதற்கு தயாராகினோம். (தொடரும்)



மாலே


# முய்சுவின் கட்சி அமோக வெற்றி

மாலத்தீவின் 20-வது பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற்றது. அங்குள்ள 93 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. ஜனாதிபதி முகமது முய்சுவின் செயல்பாடுகளால் அண்டை நாடான இந்தியாவுடனான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், இந்த தேர்தல் அவரது செல்வாக்கை நிரூபிப்பதற்கான முக்கிய சோதனையாக பார்க்கப்பட்டது. தேர்தல் முடிந்ததும் வாக்கு எண்ணிக்கை உடனடியாக தொடங்கியது.



இதில், ஜனாதிபதி முகம்மது முய்சுவின் கட்சி அதிகப்படியான இடங்களில் வென்றது.

கிட்டதட்ட 66 இடங்களை முய்சு கட்சி வென்றுள்ளது. இது பாராளுமன்றத்தில் 3-இல் 2 பங்காகும். இந்த வெற்றியைத் தொடர்ந்து முய்சு தனது சீன ஆதரவு செயல்பாடுகளை அதிகரிப்பார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தலுக்கு முன்பு முய்சுவின் பிஎன்சி கட்சிக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் சேர்ந்தே வெறும் 8 எம்.பிக்கள் மட்டுமே இருந்தார்கள். இதனால் அவரால் விரும்பிய சட்டங்களை எளிதாக பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாத நிலை இருந்தது. எதாவது சட்டத்தைக் கொண்டு வர முயன்றால் அதை எதிர்க்கட்சிகள் தங்களுக்கு இருந்த பெரும்பான்மை பலத்தை வைத்து முறியடித்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



## ஈராக் ஆயுதகுழு எச்சரிக்கை

ஈராக்கில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது தாக்குதலை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாக ஈராக்கில் உள்ள ஆயுதகுழுவொன்று தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

சிரியாவின் வடகிழக்கில் உள்ள அமெரிக்காவின் தளமொன்றின் மீது ஈராக்கின் ஜூமார் நகரிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கார்டியன் தெரிவித்துள்ளது. பெப்ரவரிக்கு பின்னர் முதல்தடவையாக தாக்குதல் இடம்பெற்றுள்ளது.பெப்ரவரி மாதத்தில் ஈராக் குழுக்கள் அமெரிக்க தளங்களின் மீது தாக்குதல்களை நிறுத்தியிருந்தன.

ஈராக்கிய பிரதமர் அமெரிக்காவிற்கு மேற்கொண்டு அமெரிக்க இராஜாங்க செயலளாரை சந்தித்த மறுநாள் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையின் போது அமெரிக்க படையினரை ஈராக்கிலிருந்து வெளியேற்றும் விடயத்தில் முன்னேற்றம் ஏற்படாததை தொடர்ந்து மீண்டும் தாக்குதலை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக ஈராக்கின் ஹெட்டாய்க் ஹெஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது. அதேவேளை தடைசெய்யப்பட்ட அமைப்புகள் சிரியாவின் மத்தியில் உள்ள சர்வதேச கூட்டமைப்பின் தளத்தை இலக்குவைத்துள்ளன என ஈராக்கிய பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

## மிஞ்சிப்போன உணவை சாப்பிடும் ஐடியா மணி

மனிதர்களில் பலரும் பண சம்பாதிப்பதிலும், பணத்தை செலவழிப்பதிலுமே வேறுபடுவார்கள். பணத்தை சிலர் தண்ணீராக செலவழிப்பார்கள், பலரோ மிக மிக சிக்கனமாக இருப்பார்கள். அதிகம் செலவழிப்பவர்களையும் இந்த உலகம் திட்டும், கஞ்சனாக இருப்பவரை நோக்கியும் முகம் சுழிக்கும். ஆனால், ஒரு நபர் தனது வினோத செயல் மூலம் பல லட்சங்களை சேமித்துள்ளார்.

நியூயார்க்கில் உள்ள பல உயர்தர உணவகங்களில் மீந்துபோகும் உணவை உண்டு தனது வயிற்றை நிரப்பியுள்ளார். அதாவது, இதை முதலில் கேட்கும்போது, வறுமையின் பிடியில் அந்த நபர் சிக்கியிருக்கலாம் என உங்களுக்கு தோன்றும். ஆனால் அவர் வறுமையால் வாடவில்லை, இது சற்று வினோதமாக தோன்றலாம். ஆனால் இது ஆச்சர்யமளிக்கும் உண்மையாகும்.

சாப்பிட முடியாமல் மீந்துபோகும் உணவுகளை



சாப்பிடுவது என்றால் நீங்கள் குப்பைத் தொட்டியில் இருந்து எடுத்து சாப்பிடுவார் என நினைக்க வேண்டாம், அவர் அதிலும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இதனை செய்துள்ளார்.

அதாவது, TooGoodToGO செயலியை பயன்படுத்தி பல சுவையான உணவுகளையும் உண்டு, பணத்தை சேமித்துள்ளார். இந்த செயலி என்பது உயர்தர உணவகங்களில் இருந்து மிஞ்சிப்போகும் உணவுகளை குறைந்த விலையில் வாடிக்கையாளர்களுக்கு சேர்க்க பயன்படும். அமெரிக்காவில் ஓராண்டுக்கு 80 தொன் உணவுகள் வீணாவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதுபோன்ற செயலிகள் மூலம் உணவுகள் வீணாகாமல் தவிர்க்கலாம். பல மக்களும் உணவுகளை குறைந்த விலையில் பெறுவார்கள்.

## மனைவியுடன் தாம்பத்தியம் கொள்ள முடியாத கணவர்

மனைவியுடன் தாம்பத்தியம் கொள்வதில் நாட்டமில்லை என்று கணவர் கூறியதால் இளம் ஜோடிக்கு விவாகரத்து வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த சம்பவம் மும்பையில் இடம்பெற்றுள்ளது.

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த 26 வயது பெண் ஒருவர் விவாகரத்து கோரி குடும்ப நீதிமன்றத்தில் கடந்த பெப்ரவரி மாதம் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அந்த மனுவில், கடந்த 2023-ம் ஆண்டு மார்ச் மாதம் தனக்கு திருமணம் நடைபெற்றதாகவும், அதன் பிறகு வெறும் 17 நாட்களில் தனது கணவரை பிரிந்து விட்டதாகவும் அவர் கூறியிருந்தார்.

மேலும் தனது கணவர் தன்னுடன் தாம்பத்திய உறவில் ஈடுபட மறுப்பு தெரிவித்துவிட்டார் என அந்த பெண் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார். தனது கணவருக்கு தன்னுடன் உறவு கொள்வதில் நாட்டமில்லை எனவும், இதனால் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் இருவராலும் ஒன்றிணைய முடியவில்லை என்றும் அப்பெண் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின்போது அந்த பெண்ணின் 27 வயது கணவர் தாக்கல் செய்த பதில் மனுவில், தனது மனைவியுடன் மட்டுமே தன்னால் தாம்பத்தியம் கொள்ள முடியவில்லை என்றும் மற்றபடி தனக்கு எந்த குறைபாடும் இல்லை என்றும் விளக்கமளித்திருந்தார். மேலும் தன் பெயருக்கு களங்கம் ஏற்படுவதை விரும்பவில்லை என்றும் அந்த நபர் கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த குடும்ப நீதிமன்றம், விவாகரத்து கோரிக்கையை ரத்து செய்து உத்தரவிட்டது. இதையடுத்து அந்த நபர் மும்பை நீதிமன்ற அவுரங்காபாத் அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் இருவருக்கும் விவாகரத்து வழங்கி உத்தரவிட்டனர்.

மேலும் தங்கள் உத்தரவில், "திருமணத்திற்குப் பிறகு மன ரீதியாகவோ அல்லது உடல் ரீதியாகவோ ஒன்றிணைய முடியாத இளம் தலைமுறையினருக்கு இது ஒரு எடுத்துக்காட்டான வழக்கு. குறிப்பிட்ட ஒரு நபருடன் மட்டும் தாம்பத்தியம் கொள்ள முடியவில்லை என்பது பொதுவான ஆண்மைக் குறைவில் இருந்து முற்றிலும் வேறுபட்டது.

ஒரு நபர் உடலுறவு கொள்ளும் திறன் கொண்டவராக இருந்தாலும், மனைவியுடன் அதைச் செய்ய இயலாத சூழ்நிலையில் இந்த பிரச்சினை ஏற்படுகிறது. இந்த பிரச்சினைக்கு பல்வேறு உடல் மற்றும் மன ரீதியான காரணங்கள் இருக்கலாம்.


இந்த வழக்கில் கணவருக்கு மனைவியுடன் உறவு கொள்வதில் நாட்டம் ஏற்படவில்லை என்பது தெரியவருகிறது. இதை அந்த கணவர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார். இதனால் இவர்களது திருமணம் பூர்த்தியாகவில்லை. இந்த இளம் ஜோடி எதிர்கொண்டு வரும் விரக்தியை நாம் புறக்கணிக்க முடியாது" என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

குஜராத்

## கழுதைப் பால் மூலம் கல்லா கட்டும் இளைஞர்

கழுதைப் பாலை விற்பனை செய்து மாதம் 2-3 லட்ச ரூபாய் வருமானம் ஈட்டுவதாக குஜராத் இளைஞர் ஒருவர் தனது தொழில் அனுபவத்தை பகிர்ந்துள்ளார்.

கழுதை பால் விற்பனையில் கொடிக்கட்டி பறந்துவருகிறது அதாவது, இவற்றை விட சுமார் 70 மடங்கு அதிகமான விலையில் கழுதைப் பால் குஜராத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தனது பண்ணையில் மொத்தம் 42 கழுதைகளை வைத்துள்ளார். கழுதைப் பாலை விநியோகிப்பதன் மூலம் ரூ. 2-3 லட்சம் வரை மாதம் வருமானம் ஈட்டுவதாக தெரிவித்துள்ளார்.





ஸ்பானிய லா லிகாத் தொடர்

## பார்சிலோனாவை வென்ற றியல் மட்றிட்

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற நடப்புச் சம்பியன்கள் பார்சிலோனாவுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் றியல் மட்றிட் வென்றது.

மட்றிட் சார்பாக வின்ஷியஸ் ஜூனியர், லூகாஸ் வஸ்கூஸ், ஜூட் பெல்லிங்ஹாம் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பார்சிலோனா சார்பாக அன்ட்ரியாஸ் கிறிஸ்ஸ்டியன்சென், பெர்மின் லொபெஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை அலாவேஸின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் தோல்வியடைந்தது.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 81 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்ரிட் உள்ளது. 70 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் பார்சிலோனாவும், 68 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஜிரோனாவும், 61 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டுமுள்ளன.



ஜேர்மனிய புண்டெலிஸ்கா தொடர்

## சமநிலையில் லெவர்குசன் டொட்டமுண்ட் போட்டி

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெலிஸ்கா தொடரில், பொரூசியா டொட்டமுண்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சம்பியனாகத் தெரிவாகியுள்ள பயேர் லெவர்குசன் சமப்படுத்தியிருந்தது.

டொட்டமுண்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை நிக்லஸ் புல்க்றுக் பெற்றதோடு, லெவர்குசன் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜோசிப் ஸ்டனிசிச் பெற்றிருந்தார்.





## காரைதீவு ஹொக்கி சாம்பியன்

வி.ரி.சகாதேவராஜா

கிழக்கு மாகாண கொக்கி சாம்பியனாக மீண்டும் ஐந்தாவது தடவையாக காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி மாகாண மட்ட சாம்பியனாகி சாதனை படைத்தது.

திருகோணமலை கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) இடம் பெற்ற ஹொக்கி மாகாண மட்ட போட்டியில் இச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

முதல் போட்டியில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை அணிகள் மோதியதில் திருகோணமலை அணி வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியும் அம்பாறையை பிரதிநிதிப்படுத்திய காரைதீவு லயன்ஸ் அணியும் மோதின.

இவ் இறுதிப்போட்டியில் 2/0 என்ற அடிப்படையில் காரைதீவு லயன்ஸ் அணி வெற்றி பெற்று மாகாண மட்ட சாம்பினானது.

## ஐ.பி.எல்: பஞ்சாப்பை வென்ற குஜராத்



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), முலான்பூரில் ஞாயிற்றுக்கிழமை (21) நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுடனான போட்டியில் குஜராத் டைட்டான்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப்பின் அணித்தலைவர் சாம் கர்ரன், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், பிரப்ஹ்சிம்ரன் சிங்கின் 35 (21) ஓட்டங்களோடு வேகமான ஆரம்பத்தைப் பெற்றாலும் மோஹித் ஷர்மா (2), நூர் அஹ்மட் (2), ரஷீட் கான், சாய் கிஷோரிடம் (4) விக்கெட்டுகளைப் பறிகொடுத்த நிலையில் ஹர்பிறீட் பிறாரின் 29 (12) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 143 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய குஜராத், அணித்தலைவர் ஷுப்மன் கில்லின் 35 (29), சாய் சுதர்ஷனின் 31 (34), ராகுல் டெவாட்டியாவின் ஆட்டமிழக்காத 36 (18) ஓட்டங்களோடு 19.1 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் ஹர்ஷால் பட்டேல் 3-0-15-3, லியாம் லிவிங்ஸ்டோன் 4-0-19-2 என்ற பந்துவீச்சுப் பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக கிஷோர் தெரிவானார்.

இதேவேளை கொல்கத்தாவில் நடைபெற்ற மற்றைய போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவை கொல்கத்தா நைட் றைடர்ஸ் வென்றிருந்தது.

இந்நிலையில் சென்னையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸை சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 23 ஏப்ரல் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.